# 3

# "நீ காணாத ஒன்றை நான் காண்கிறேன்"

**இலக்கு**

*விளையாட்டினூடாக மாணவர்கள் பேச்சுச் சொற்களஞ்சியத்தை வலுப்படுத்தி, வாய்வழி வெளிப்பாட்டையும் கேட்டல் திறன்களையும் பயன்படுத்த வேண்டும்.*

மழலையர் - தரம் 6 | 5 - 20 மணித்துளிகள்



**கருவிகள்:**
முடியுமாயின் படப் புத்தகம்

**குறிப்பு:**

இந்த விளையாட்டை வகுப்பு முழுவதுமாகவும், சிறு குழுவாகவும், அல்லது இருவராகவும் விளையாடலாம்.

---

**நடைமுறை:**

- வகுப்பறையில் உள்ள அனைவராலும் பார்க்கக் கூடிய ஒரு பொருளை ஒரு மாணவன் மனதில் தெரிவு செய்கிறான். அவன் "நீங்கள் காணத ஒன்றை நான் காண்கிறேன" என்று கூற வேண்டும்.
- ஏனைய மாணவர்கள் தேர்ந்தெடுத்த பொருளைக் கேள்வி கேட்டு அப்பொருளை அறிய முயல்வர். "ஆம" அல்லது "இல்லை" என மறுமொழி கூறும் வினாக்களே கேட்கப்படலாம். (எ.கா.: "அந்த பொருள் தளபாடமா?", "அது சிவப்பு நிறமா?"). திறன்மிகு கேள்விகளைக் கேட்பதனால், படிப்படியாக பொருள்களைச் சுருக்க முடியும். எ.கா.: "வகுப்பறையின் வலது பக்கம் உள்ளதா? பெரிய பொருளா? பச்சை நிறமான பொருளா?" இக்கேள்விகளுக்கான விடைகள் "ஆம்" என வந்தால், கேள்விகளை கேட்டவரே தொடரலாம் "இல்லை" எனில் வேறொரு மாணவர் கேள்வி கேட்கலாம்.
- எப்பொருள் என்பதனை சரியாக கண்டு பிடித்தவருக்கே ("அது சுவர்ப் பலகையா?", "ஆம்") அடுத்த பொருளை மனதில் தெரிவு செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது.

---

**மாற்று வழிகள்:**

- சிறு குழுவாக விளையாடினால், சுற்றியுள்ள பொருள்களோடு விளையாடாமல், பல பொருட்களின் படங்களோடு விளையாடலாம் (இவ்விளையாட்டுக்கு பொருத்தமானவை "மறை பொருள் படங்கள்" போன்றவை.
- மாணவர்கள் ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்து விளையாடாமல், பிரபலமான ஒருத்தரை, அல்லது சகமாணவரை அல்லது ஒரு தொழிலை, அல்லது முன்னரே எடுத்துக்கொண்ட ஒரு விடயத்தை வைத்து விளையாடலாம்.
- ஒரு பாடத்தைத் தொடக்க முன்னர், ஆசிரியர் பாடத்தோடு தொடர்புள்ள ஒரு பொருளை பெட்டிக்குள் மறைத்து வைக்கிறார். மாணவர்கள் அப்பொருள் என்னவென்று உய்த்துணர வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வைத்துப் பாடத்தைத் தொடங்கலாம். (எ.கா.:கருப்புக் கண்ணாடிகளை பெட்டிக்குள் மறைத்துவைத்து, "விடுமுறை" எனும் பாடத்தை ஆரம்பிக்கலாம்).
- ஒரு பொருளை உய்த்துணர்வதற்கு மாறாக, மாணவர்கள் கண்களை மூடிக்கொண்டு ஒலிகளையோ குரலையோ இதன் மூலம் கேட்டல் திறனை பயிற்சிப்பதுடன், மன ஒருநிலைப்படுத்தலையும் முன்னேற்றலாம்.

I